செ.வெ.எண்:27 நாள்:16.11.2020

## பத்திரிக்கைச் செய்தி

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டதில் (NEEDS) பயன்பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

படித்த வேலைவாய்ப்பற்ற, முதல் தலைமுறையினரை தொழில் முனைவோராக்கும் பொருட்டு தமிழக அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்–NEEDS) என்ற திட்டத்தினை உருவாக்கியுள்ளது. 25% அரசுமானியத்துடன் கூடிய கடனுதவி திட்டத்தில் பட்டம், பட்டயம், தொழிற்கல்வி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில் பயிற்சிசான்றிதழ் பெற்றஇளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

மேலும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுய தொழில் துவங்கி முதலாம் தலைமுறை தொழில் முனைவோரை உருவாக்க கீழ்க்கண்ட திட்டப்படி கடன் உதவி மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

**1. கடன் திட்டம் :**

- இத்திட்டத்தில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.10.00 இலட்சம் முதல் அதிக பட்சமாக ரூ.5.00 கோடி வரை தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் 25% மான்யத்துடன் (அதிக பட்சமாக ரூ.50.00 இலட்சம்) நிதியுதவி வழங்கப்படும். 3% பின் முனை வட்டிமான்யமும் வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் அதிகபட்சமான்யத்தொகை ரூ.30.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக அதகரித்து தமிழக அரசின் அரசாணை எண்.70, நாள்.03.11.2020 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

**2. கடன் பெறதகுதிகள்:**

- இத்திட்டத்தின் கீழ்கடன் பெற விண்ணப்பிக்கும் பொது பிரிவினருக்கு 21 வயது முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினருக்கு (பட்டியல்இனத்தவர்/பிற்பட்டவகுப்பினர்/மிகவும் பிற்பட்டவகுப்பினர்/சிறுபான்மைனர்/திருநங்கைகள்/மாற்றுத் திறனாளிகள்/மகளிர் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்) ஆகியோர்களுக்குவயது 45க்குள் இருக்கவேண்டும்.

- கல்வித் தகுதியாக பட்டம், பட்டயம், ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழிற் சார் பயிற்சி படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பிக்கலாம்.

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் இதர திட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் பெற தகுதியற்றர்கள் ஆவார்கள்.

**3. பயனாளிகள்பங்களிப்பு :**

இத்திட்டத்தின் கீழ்கடன் பெறும் பொது பிரிவு பயனாளிகள் தங்களுடைய பங்காக திட்ட மதிப்பீட்டில் 10 சதவிகிதம் செலுத்த வேண்டும். சிறப்பு பிரிவு பயனாளிகள் அதாவது பட்டியல் இனத்தோர், பட்டியல் இனத்தைச் சார்ந்த மலை வாழ்பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 5 சதவிகிதம் தங்களது பங்கீடாக செலுத்த வேண்டும்.

இந்த திட்டத்தில் விண்ணப்பம் செய்து பயன் பெற விரும்பும் பயனாளிகள் (www.msmeonline.tn.gov.in/needs) என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெற பொதுமேலாளர், மாவட்ட தொழில்மையம், சத்தியமூர்த்தி நகர், தாந்தோணிமலை, கரூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**